ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2178/13 - 2020 ජුනි මස 01 වැනි සඳුදා - 2020.06.01

*2178/13 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்*

*2020 ஆம் ஆண்டிற்குரிய தேருநர் இடாப்புகளின் திருத்தம் 2020, யூன் மாதம் 01 ஆந் திகதி ஆரம்பமாகியுள்ளதென்று 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*2. தற்சமயம் நடைமுறையிலிருக்கும் தேருநர் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்களின் பிரதிகள் பதியும் அலுவலர்களால் அவர்களின் அலுவலகங்களிலும் கீழ்க்காணும் அலுவலகங்களிலும் பார்வைக்கு வைக்கப்படும்.*

| *இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள்* | *பார்வைக்கு வைக்கப்படும் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்கள்* |
|---|---|
| ஒவ்வொரு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | தேர்தல் மாவட்டத்திற்கான முழு தேருநர் இடாப்பின் பிரதி |
| ஒவ்வொரு பிரதேச செயலகம் | பிரதேச செயலாளர் பிரிவினுள் வதியும் தேருநர்களின் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள் |
| ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற அலுவலகங்கள் | ஒவ்வொரு உள்ளூராட்சிமன்ற அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களினுள் வதியும் சகல தேருநர்களினதும் பெயர்களடங்கிய இடாப்பின் பாகங்கள் |
| ஒவ்வொரு கிராம அலுவலர்களின் அலுவலகம் | கிராம அலுவலர் பிரிவிற்குள் வதியும் எல்லாத் தேருநர்களினதும் பெயர்களடங்கிய இடாப்பின் பாகங்கள் |

1A - G 32290 — 57 (2020/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*3.* ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தின் ஒரு வாக்காளராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் மேற்கூறப்பட்ட அலுவலகங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் தேருநர் இடாப்புக்களில் பதியப்பட்டிருக்கிறதா என்று பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020, யூன் 01.

*06-104*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.